# மாகாணக் கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

வரலாறு I, II
History I, II

தரம் - 09

இரண்டு மணித்தியாலம்

சுட்டெண்:……………………………….....

### பகுதி - I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- இலக்கம் 1-20 வரையான இலக்கங்களுக்கு சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. கி.பி 1509 ஆம் ஆண்டு கீழைத்தேய போர்த்துக்கேய இராசப் பிரதிநிதியாக நியமனம் பெற்றவர்
   (1) சேர் பீட்டர் கூன் (3) பன் எங்கல் பெக்
   (2) அல்போன்ஸ் டி அல்பகூர் (4) அல்போன்ஸ் டி அசாத்

2. “குண்டசாலை” இளவரசன் என அழைக்கப்பட்டவர்
   (1) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் (3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
   (2) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் (4) ஸ்ரீ விஜய இராஜசிங்கன்

3. கி.பி 1833 ஆம் ஆண்டு இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
   (1) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்.
   (2) கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்.
   (3) சோல்பெரி அரசியல் யாப்புச் சீர்திருத்தம்.
   (4) குறூ – மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்.

4. கி.பி 1848 ஆம் ஆண்டு இலங்கையின் இரண்டாவது சுதந்திரப்போராட்டத்திற்குக் காரணமான ஆளுநர்
   (1) பிரட்டிக் நோர்த் (2) டொரிங்டன் (3) எட்வேட் பாண்ஸ் (4) மெயிற்லன்ட்

5. இப்படத்தில் காணப்படும் ஒல்லாந்தர் கோட்டை



   (1) காலிக்கோட்டை 3. யாழ்ப்பாணக் கோட்டை
   (2) பெற்றிக்கோட்டை 4. மட்டக்களப்புக் கோட்டை

6. கல்வி கற்ற இலங்கையராக சட்டவாக்கக் கழகத்தில் முதன் முதல் தெரிவுசெய்யப்பட்டவர்
   (1) சேர்.பொன் அருணாசலம் (3) ஜேம்ஸ் பீரிஸ்
   (2) சேர் பொன் இராமநாதன் (4) ஜோன்.த.சில்வா

**7 – 10 வரையான வினாக்களுக்கு கீழுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.**

A – சைவப்பிரகாச வித்தியாசாலை B – புளத்கம தம்மாலங்காரதேரர்
C - ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் D – சரசவி சந்தரெச
E – பரமேஸ்வரா வித்தியாலயம் F – பாணாந்துறை விவாதம்

7. மேற்கூறப்பட்ட தகவல்களில் சேர். பொன் இராமநாதன் அவர்களுடன் தொடர்புடைய விடை
   (1) C (2) E (3) F (4) A

Past Papers Wiki



8. பஞ்சமகா விவாதத்துடன் தொடர்புடைய விடைத் தொகுதி

(1) C,B (2) D,C (3) A,B (4) C,F

9. பௌத்தர்களது அச்சு ஊடகங்கள் தொடர்பான சரியான விடைத் தொகுதி

(1) D,B (2) B,C (3) D,F (4) D,F

10. இந்து சமய மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய விடைத் தொகுதி

(1) A,D (2) A,E (3) D,E (4) A,C

11. இப்படத்திலுள்ள இந்துசமய மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றிய தலைவர்



(1) டீ.பி ஜாயா
(2) சேர்.பொன் அருணாசலம்
(3) சேர்.பொன் இராமநாதன்
(4) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

12. “சுயாட்சி என்பது எனது பிறப்புரிமையாகும். அதை நான் பெற்றே தீருவேன்” எனக் கூறியவர்.

(1) மகாத்மாகாந்தி (3) பாலகங்காதர திலகர்
(2) ஜவகர்லால் நேரு (4) தாதாபாய் நவரோஜி

13. இந்திய தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர்

(1) சேர் பொன் அருணாசலம் (3) தாதாபாய் நவரோஜி
(2) சரேந்திரநாத் பெனர்ஜி (4) டபிள்யு.சீ.பெனர்ஜி

14. “டெக்கான் (தக்கண)கல்விச் சமூகம்” எனும் அமைப்பைத் தோற்றுவித்தவர்

(1) பாலகங்காதர திலகர் (3) தாதாபாய் நவரோஜி
(2) சுரேந்திரநாத் பெனர்ஜி (4) ஜவகர்லால் நேரு

| “அ” | “ஆ” |
|---|---|
| கி.பி 1921 | A - வெள்ளையனே வெளியேறு |
| கி.பி 1919 | B - சிவில் சட்டத்தை மீறும் இயக்கம் |
| கி.பி 1930 | C - ஒத்துழையாமை இயக்கம் |
| கி.பி 1942 | D - ரொலட் சட்டம் |

15. மேற்குறிப்பிட்ட “அ” பகுதியை “ஆ” பகுதியுடன் இணைக்கும் போது வரும் சரியான விடைத்தொகுதி

(1) ABCD (2) CDAB (3) DCAB (4) CDBA

16. இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி

(1) எஸ்.டபிள்யு.அர்.டீ.பண்டாரநாயக்க (3) டட்லி சேனாநாயக்க
(2) டீ.எஸ் சேனாநாயக்க (4) வில்லியம் கோபல்லாவ

17. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி

(1) வில்லியம் கொபல்லாவ (3) ஜே.ஆர் ஜயவர்த்தன
(2) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (4) சேர்.ஜோன் கொத்தலாவ

18. சட்டத்துறை சார் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனம் பாராளுமன்றம் என அழைக்கப்பட்ட யாப்பு
    (1) சோல்பரி யாப்பு (2)டொனமூர் யாப்பு (3) குறுமக்கலம் யாப்பு (4) மனிங் யாப்பு

19. இலங்கை, ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசு என அழைக்கப்பட்ட யாப்பு
    (1) கி.பி 1910 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு (3) கி.பி 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு
    (2) கி.பி 1931 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு (4) கி.பி 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு

20. இலங்கையின் வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் பேட்டை
    (1) இரத்மலானை (2) அச்சுவேலி (3) கொத்மலை (4) ஏக்கல

$(20 \times 2 = 40$புள்ளிகள்)

## பகுதி *II*

- **முதலாம் வினா கட்டாயமானது**
- **முதலாம் வினாவுக்கும் ஏனைய விரும்பிய நான்கு வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. **அ தொடக்கம் ஊ வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு பொருத்தமான இடங்கள், தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் A – H வரை குறித்துக் காட்டப்பட்டுள்ளன. அந்த வினாக்களுக்குப் பொருத்தமான ஆங்கில எழுத்துக்களையும் அந்த எழுத்துக் குறிக்கும் இடங்களின் பெயர்களையும் உங்களது விடைத்தாளில் ஒழுங்கு முறையில் எழுதுக.**




அ) இக் கோட்டையைக் கைப்பற்றியதுடன் போர்த்துக்கேயரின் ஆட்சி முடிவுக்கு வந்தது

ஆ)கி.பி 1848 ஆம் ஆண்டு போராட்டத்தின் மத்திய நிலையமாகத் திகழ்ந்த இடம்

இ) கி.பி 1871 ஆண்டு பகிரங்க விவாதம் இடம் பெற்ற இடம்

ஈ) முதலாவது கைத்தொழில் பேட்டை நிறுவிய இடம்

உ)ஆங்கிலேயர் இலங்கையில் கைப்பற்றிய முதலாவது கோட்டை அமைந்துள்ள இடம்

ஊ) அந்நியர் ஆட்சிக்காலத்தில் தனியரசாக விளங்கியது (12 புள்ளிகள்)

PAST PAPERS WIKI



1. (i) இப்படத்தில் காணப்படும் அமைப்பு யாது?
   ……………………………………………………
   (ii) இவ்வமைப்பிற்கு வழங்கப்பட்ட பெயருக்கு அடிப்படையாகக் காணப்பட்ட அரசியல் யாப்பு எது?
   ……………………………………………………
   (iii) இதன் செயற்பாடு யாது?
   ……………………………………………………

Past Papers Wiki



2. (i) இப்படத்தில் உள்ள நபரைப் பெயரிடுக.

.........................................................

(ii) இவரின் சிறப்பு பதவி நிலை யாது?

.........................................................

(iii) இப்பதவி நிலை எவ் அரசியல் யாப்பினை அடிப்படையாகக் கொண்டது?

.........................................................

(12 புள்ளிகள்)



2.

(i) ஒல்லாந்தரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நீதிமன்றங்களில் மூன்றினைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் தூதுவர்கள் சந்தித்த கண்டி மன்னர்களைக் குறிப்பிடுக.

அ) ஜோரிஸ்வான் ஸ்பில் பேர்ஜன் -

ஆ) சிபெல்தவர்ட் -

இ) ஜெனரல் ஜெராட் ஹல்ப்ட் -

ஈ) ஹலன் அல்பஸ் - (04 புள்ளிகள்)

(iii) ஒல்லாந்தரின் பொருளாதார நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

3.

(i) பிரித்தானியரால் மேற்கொள்ளப்பட்ட பெருந்தோட்டப் பயிர்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) சுதேச விவசாயத்தினை மேம்படுத்த பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்ட ஆளுநர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக

a) அநுராதபுரத்தில் பசவக் குளம், திசாவாவி, கலாவாவி, கந்தளாய்க் குளங்களைப் புனரமைத்தவர்

b) நீர்ப்பாசனம் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு ஆணைக்குழுவொன்றை நியமித்தவர்.

c) 1855இல் நீர்ப்பாசன நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு செயற்குழுவொன்றை நியமித்தவர்.

d) நீர்ப்பாசனத் திணைக்களத்தை நிறுவியவர். (04 புள்ளிகள்)

(iii) தேயிலைப் பயிர்ச்செய்கை இலங்கையில் முக்கியமான பொருளாதாரப் பயிராக மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக.

(05 புள்ளிகள்)

4.

(i) பிரித்தானியரால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பு சீர்திருத்தங்களில் மூன்றினை ஆண்டுகளுடன் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் விசேட பண்புகளைக் கொண்ட அரசியல் யாப்பு சீர்திருத்தங்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக

a) வரையறுக்கப்பட்ட வாக்குரிமை

b) சட்டவாக்க சபை அரசுக்கழகம் எனும் பெயரால் அழைக்கப்பட்டது.

c) உத்தியோக சார்புள்ளோரை விட உத்தியோக சார்பற்றோர் தொகை அதிகரித்தமை

d) கட்டாய இராஜகாரியமுறை நீக்கப்பட்டமை (04 புள்ளிகள்)

(iii) சோல்பரி அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் விசேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

5.

(i) சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் அரசாங்கத்தை நிறுவி ஆட்சி செய்த முதல் மூன்று பிரதம மந்திரிகளை ஒழுங்குமுறையில் தருக (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

a) இலங்கையின் முதலாவது ஆளுநர் நாயகம் -

b) இலங்கையின் முதலாவது பெண் பிரதமர் –

c) இலங்கையின் முதலாவது பிரதமர் -

d) இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி - (04 புள்ளிகள்)

(iii) கி.பி 1978 ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் பிரதான அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

6.

(i) மொகலாயப் பேரரசின் பேரரசர்கள் மூவரைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

a) "இந்தியாவின் மேன்மையாளர்" என சிறப்புப் பெயரால் பிரபல்யம் அடைந்தவர் -

b) "உலக அபிமானி" எனும் சிறப்புப் பெயரால் பிரபல்யமடைந்தவர். –

c) தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்களுக்காக குரல் கொடுத்தவர் -

d) இந்திய தேசிய சங்கத்தைத் தோற்றுவித்தவர் - (04 புள்ளிகள்)

(iii) மகாத்மா காந்தியின் அகிம்சைவாதப் போராட்டங்கள் நான்கினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

7.

(i) ஐம்பெரும் விவாதங்கள் இடம்பெற்ற இடங்கள் மூன்றினைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் பணிகளை ஆற்றிய தலைவர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

a) பகிரங்க விவாதத்திற்குத் தலைமை தாங்கியவர்.

b) "உதயபானு" எனும் பத்திரிகையை அரம்பித்தவர்.

c) புத்தகாயா உட்பட இந்தியாவின் வழிபாட்டிடங்களைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டவர்.

d) சாஹிராக் கல்லூரி மூலம் இஸ்லாமிய மாணவர்களுக்கு சமயம் சார்ந்த கல்வியை வழங்கியமை. (04 புள்ளிகள்)

(iii) இந்துசமய மறுமலர்ச்சிக்காக பாடுபட்ட தலைவர்கள் மூவரைக் குறிப்பிட்டு, அவர்களில் ஒருவரின் பணிகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi



Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library